சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **01 / 2019**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **10.03.2026**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : தமிழ்இனியன் | கிராமம் : |
| த/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) பாலிசி காப்பி - எ.ம.சா.ஆ.1

2) வழக்கறிஞர் அறிவிப்பு - எம.சா.ஆ.2

3) ஒப்புதல் அட்டை - எ.ம.சா.ஆ.3

4) திருப்பப்பட்ட அறிவிப்பு - எ.ம.சா.ஆ.4

5) ஒப்புதல் அட்டை - எ.ம.சா.ஆ.5. மனுப்படி தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எ.ம.சா.ஆ.1 -யில் கண்டுள்ள காப்பீடானது முழுமையான காப்பீடு என்றால் சரிதான். மனுதாரரை பொறுத்து முதல் எதிர்மனுதாரர் மூன்றாவது நபர் என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரியல்ல. இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிப்பதற்காக ஓட்டுநர் உரிமம் இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியின் மீது தான் குளித்தலை காவல் துறையினர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். குளித்தலை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் நடுவர் எண்.1-யில் முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் அபராதம் செலுத்தியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டி தான் விபத்தை ஏற்படுத்தியதால் எங்களது நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.10 17:19:49 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.